[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

அன்னையே, நீர் இன்றி அமையாது இவ்வுலகு. அம்மா, நீங்கள் இன்றி உயராது தமிழ்நாடு. தமிழ்நாட்டை இத்தரணியில் தலைநிமிர்த்த, முன்நிறுத்த முப்பொழுதும் உழைக்கும் முன்னவர், முறை செய்து காக்கும் மூலவர், தன்னை மெய்வருத்தி உழைக்கும் தியாகத்தின் திருவுருவம், பன்மொழி வித்தகம், பல்கலைப் புத்தகம், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு அளித்திருக்கின்ற முத்தான திட்டங்கள் அனைத்தையும் கண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சியோடு என்னுடைய மகிழ்ச்சியையும் இணைத்து மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவினையும், உச்ச நீதிமன்ற உத்தரவையும் நிராகரித்து கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவினையும், உச்ச நீதிமன்ற உத்தரவையும் நிராகரித்து கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. ந. நஞ்சப்பன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கே. உலகநாதன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

2012 நவம்பர் 2]

பிற்பகல் 12-10

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசும், மத்திய அரசும் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வருகின்ற காரணத்தினால் தமிழ்நாட்டுக்கு காவிரியிலிருந்து கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்காமல் இந்த ஆண்டு குறுவை சாகுபடி அறவே நடத்தமுடியாமல் போய்விட்டது. அதேபோன்று சம்பா சாகுபடியும் மேட்டூர் அணை காலதாமதமாகத் திறக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்ட காரணத்தினால் வழக்கமான சாகுபடிப் பணிகளை மேற்கொள்ளமுடியாமல் நேரடி விதைப்பு என்கிற முறையிலே சாகுபடி செய்யவேண்டிய இக்கட்டான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தமிழகத்தினுடைய உரிமையைப் பெறுவதற்கு, காவிரி நீரைப் பெறுவதற்கு, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்ட வைத்து, நம்முடைய உரிமைக்காகக் குரல் கொடுத்திருக்கிற தமிழக அரசினுடைய நடவடிக்கையையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற நடவடிக்கையையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், இந்த ஆண்டு துவக்கத்திலேயே கர்நாடக அரசாங்கம் கோடைக்காலத்திலே சட்டத்திற்கு விரோதமாகத் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்தி அந்த நீர் நிலைகளையெல்லாம் காலிசெய்து விட்டது உட்பட நம்முடைய முதலமைச்சர், மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதேபோன்று உச்ச நீதிமன்றத்திலே வழக்குப் போட்டு, அவர்கள் காவிரி ஆணையத்தைக் கூட்ட வைத்து, நமக்குத் தண்ணீர் திறந்துவிடவேண்டுமென்று அங்கே கோரிக்கை வைத்து ஆணையமும் நமக்கு தினமும் வினாடிக்கு 9,000 கன அடி தண்ணீர் விடவேண்டுமென்று உத்தரவிட்டது. அதை சுப்ரீம் கோர்ட் மீண்டும் வலியுறுத்தியது. இவற்றையெல்லாம் கர்நாடக அரசாங்கம் முழுமையாக அமல்படுத்த முடியாது என்று அடம் பிடித்துக்கொண்டேயிருக்கிறது. இப்பிரச்சினையில், நடவடிக்கை எடுக்க வேண்டிய மத்திய அரசு ஒரு பார்வையாளராக இருக்கிறதே தவிர அவர்கள் உருப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசாங்கத்திலே தமிழகத்தின்

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2012 நவம்பர் 2

அமைச்சர்களாக இருக்கிறவர்கள், இன்றைக்கு தமிழகம் இப்படி வஞ்சிக்கப்படுகிற இந்த நேரத்தில் கூட மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையை அமல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தாதது அவர்கள் தமிழகத்திற்குச் செய்திருக்கிற துரோகம் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தச் சூழ்நிலையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், 'கவனத்தை ஈர்க்கிறேன்' என்று சொல்லி உங்கள் உரையைச் சுருக்கமாக முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: நான் வற்புறுத்த விரும்புவது தமிழக அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் மத்திய அரசாங்கத்தை இன்னும் கூடுதலாக வற்புறுத்துவதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, பிரதமர் அவர்களை நேரடியாகச் சந்தித்து வற்புறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது மேலும் நம்முடைய குரலை வலுப்படுத்துவதற்கு உதவி செய்யும். இன்னும் சொல்லப்போனால், யார் யார் அந்தக் குழுவிலே இடம் பெறுகிறார்கள் என்பதை அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் அது உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இதே சட்டமன்றக் கூட்டத்திலே இதனை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசை வற்புறுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இப்போது மழை வெள்ளத்தால் ஒரு பக்கம் சேதம் ஏற்பட்டிருந்தாலும், மழை முடிந்த பிறகு மீண்டும் தண்ணீர் பிரச்சினை வரக்கூடும். எனவே, இந்த ஆண்டு சம்பாவையும் முழுமையாக காப்பாற்ற முடியாத இக்கட்டான சூழ்நிலையில், மத்திய அரசாங்கத்திடம் இந்த பாதிப்புகளுக்கு நஷ்ட ஈடு கோருகிற அந்தத் தீர்மானத்தையும் தமிழக அரசு நிறைவேற்றி வற்புறுத்த வேண்டுமென்று கேட்டு, தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் தமிழகத்தின் உரிமை. ஒவ்வோர் ஆண்டும் காவிரி நீரை போராடித்தான் பெறவேண்டிய சூழல் இருக்கிறது.

2012 நவம்பர் 2] [திரு. கே. உலகநாதன்]

அந்த வகையில்,மத்திய அரசு கண்டுகொள்ளாத போக்கில் உள்ளது. கர்நாடக அரசும் தமிழகத்திற்குரிய தண்ணீரைக் கொடுக்க மறுக்கிற போக்கில் உள்ளது. இதை உணர்ந்துதான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், 2003 ஆம் ஆண்டு முதல் கூட்டப்படாத அந்த ஆணையத்தைக் கூட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வெற்றி கண்டார்கள். ஆகவே, அந்த வகையில் காவிரி டெல்டா விவசாயிகளின் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, காவிரி ஆணையம் தமிழகத்திற்கு உரிய 9,000 கன அடி தண்ணீரை கொடுக்கச் சொல்கிறபோதுகூட இன்றைய கர்நாடக அரசு, ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கொடுக்க முடியாது என்று சொல்கிறது. ஆகவே, மத்தியில் இருக்கக்கூடிய கர்நாடகத்தைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களும், திரு. வீரப்பமொய்லி அவர்களும் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறபோதுகூட தமிழகத்தைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாயைத் திறக்காது மௌனியாக இருக்கிறார்கள் என்பதை, தமிழக விவசாயிகளையும், காவிரி டெல்டா விவசாயிகளையும் வஞ்சிக்கிற போக்காக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, அந்த வகையில் இன்றைக்கு காவிரி நதி நீர் ஆணையம் அறிவித்தபடி 205 டி.எம்.சி. தண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் தேதி தண்ணீர் தந்ததன் காரணமாக, அந்த ஆண்டு அந்த விவசாயிகள் நல்ல உற்பத்தி செய்தார்கள்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், 'கவனத்தை ஈர்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. கே. உலகநாதன்: சரி, சொல்லிமுடித்து விடுகிறேன். ஆகவே, அந்த வகையில் காவிரி நதி நீர் ஆணையம் அறிவித்ததன் அடிப்படையில், முழு தண்ணீரையும் பெற்றுத் தருவதற்கான முயற்சியை மேற்கொள்வதற்கு மத்திய அரசும், நம்முடைய தமிழக அரசும் நிரந்தரமாக ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க

[திரு. கே. உலகநாதன்] [2012 நவம்பர் 2

வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த ஆண்டு, காலம் கடந்து தண்ணீர் தருவதால் குறுவையும் கிடையாது; அதைப்போல சம்பா நடவுகூட இன்றைக்கு பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. இதை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் வழங்குவதற்கும், அதைப்போல இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு முடிவினை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையாக விளங்குவது காவிரி நதி நீர்ப் பிரச்சினை. 1892 ஆம் ஆண்டு மற்றும் 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் காவிரியில் தமிழ்நாட்டிற்குள்ள உரிமையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றாமல், 1960-களின் பின் பகுதியிலும், 1970-களின் தொடக்கத்திலும் மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், காவிரி நதியில் உரிமையுள்ள மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமலும், தன்னிச்சையாக பல்வேறு அணைக்கட்டுகளை கர்நாடக அரசு கட்டியது. ஆண்டுக்காண்டு விவசாய நிலங்களின் பரப்பினையும் கர்நாடகா அதிகரித்துக்கொண்டே சென்றது. இதனையடுத்து 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் தாவா சட்டத்தின்படி, நடுவர் மன்றம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, மத்திய அரசிற்கு ஒரு கடிதத்தினை அனுப்பியது. இந்தக் கடிதத்தின்மீதும் மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1986 ஆம் ஆண்டு என்றால், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக்காலம். இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு காவிரி நீர்ப் பாசன விளைபொருள்கள், விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், உணர்வுப் பூர்வமான இந்தப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு 1990 ஆம் ஆண்டு ஓர் உத்தரவினைப் பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவினைத் தொடர்ந்து 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர்

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழக அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிரூட்டும் வகையில் காவிரி நடுவர் மன்றத்தை ஜூன் 1990 ஆம் ஆண்டு மத்திய அரசு உருவாக்கியது. இந்தக் காவிரி நடுவர் மன்றம் 25-6-1991 அன்று பிறப்பித்த இடைக்கால ஆணையில், மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கர்நாடகா தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்றும், கர்நாடகா தனது பாசனப் பரப்பை 11.20 இலட்சம் ஏக்கருக்கு மேல் விரிவாக்கம் செய்யக்கூடாது என்றும், இடைக்கால ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் தமிழகத்திற்கு நீர் விடுவிக்க வேண்டுமென்றும், இந்த இடைக்கால ஆணை, இறுதித் தீர்ப்பு அளிக்கும்வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தீர்ப்பு அளித்துள்ளது. காவிரி நடுவர் மன்றத்தால் அளிக்கப்பட்ட இந்த இடைக்கால ஆணை தமிழகத்திற்கு சாதகமாக இல்லை என்ற போதிலும், காவிரி பாசன விவசாயிகளின் உடனடி நலன் கருதியும், மாநிலங்களுக்கிடையே நல்லுறவு நிலவ வேண்டும் என்ற எண்ணத்தோடும், இறுதி ஆணையில் கூடுதலாக நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் தமிழ்நாடு அரசு இடைக்காலத் தீர்ப்பினை ஏற்றுக்கொண்டது. ஆனால், கர்நாடக அரசோ, காவிரி நடுவர் மன்ற ஆணை, கர்நாடகத்தைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவித்து, இடைக்கால ஆணையினை அவமதிக்கும் வகையில் ஓர் அவசரச் சட்டத்தினை இயற்றியது. அதனை எதிர்த்து, எனது தலைமையிலான தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் காவிரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், கர்நாடக அரசின் அவசரச் சட்டம் செல்லாது என்றும் 22-11-1991 அன்று மத்திய அரசுக்கு கருத்துரை வழங்கியது. பின்னர், எனது தலைமையிலான அரசின் உறுதியான நடவடிக்கை காரணமாக 10-12-1991 அன்று காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசிதழில் மத்திய அரசு வெளியிட்டது. இருப்பினும், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படி ஒருமுறை கூட கர்நாடகா நமக்குத் தண்ணீரை விட்டது இல்லை. மாறாக, உபரி நீரை மட்டுமே கர்நாடகா விடுவித்து வந்தது. கர்நாடக அரசின் பிடிவாதப் போக்கின் காரணமாக மரபு உரிமைப்படி இயல்பாக நமக்கு காவிரி நதி நீரில் பாசனத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை நாம் வற்புறுத்திக் கேட்டுப் பெறுகின்ற சூழ்நிலைக்கும்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

நீதிமன்றங்களுக்குச் சென்று ஆணையைப் பெறுகின்ற சூழ்நிலைக்கும், அவ்வாறு பெற்ற ஆணை மதிக்கப்படாத நிலையில் பயிர்களைக் காப்பாற்ற மத்திய அரசை வற்புறுத்தி நமது உரிமைகளைப் பெறுகின்ற சூழ்நிலைக்கும் தமிழ்நாடு பலமுறை தள்ளப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 12-20

இந்தச் சூழ்நிலையில், 5-02-2007 அன்று காவிரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை வெளியிட்டதோடு. இந்த ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்துள்ளது. நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 14-06-2011 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புது டெல்லியில் நேரில் சந்தித்து காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்றும், இந்த ஆணையை நடைமுறைப்படுத்த காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றினை அமைக்க வேண்டு என்றும் வலியுறுத்தினேன். இதனைக் கடிதங்களின் வாயிலாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் பலமுறை வலியுறுத்தியிருக்கிறேன். காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட தடையில்லாத சூழ்நிலையில், உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு வந்தபிறகுதான் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட முடியும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவும், காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை ஏற்படுத்தவும் மத்திய அரசுக்கு உத்தரவிடுமாறு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீட்டு மனுவை விசாரணைக்குக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவிரி நடுவர் மன்றத்தில் காலியாகவுள்ள தலைவர் பதவியை நிரப்ப வேண்டியதன் அவசியத்தை பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வேதனைக்குரியது.

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இந்தச் சூழ்நிலையில் கர்நாடகா தனது கோடைக்காலப் பாசனத்திற்காக கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி மற்றும் ஹாரங்கி நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்தி வருகிறது. கர்நாடக அரசின் இந்த நடவடிக்கைமூலம் தமிழகத்தின் குறுவைப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காது என்பதைக் கருத்தில்கொண்டு, 21-03-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றினை எனது தலைமையிலான அரசு தாக்கல் செய்தது. இந்த மனுவில், கர்நாடகா கோடைப் பாசனத்திற்கு தனது அணைகளில் இருந்து தண்ணீர் விடுவிப்பதை தடை செய்ய வேண்டுமென்றும், இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து 103.24 டி.எம்.சி. அடிநீருக்கு மேல் கர்நாடகா பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், கர்நாடக அரசு அதன் கோடைக்காலப் பாசனத்திற்காக 1-02-2012 முதல் நீரை உபயோகித்துள்ளது என்றும், நீர்த்தேக்கங்களுக்கு வரக்கூடிய நீர் வரத்தினைத் தேக்கி வைத்துக்கொண்டு, நீர்த்தேக்கங்கள் நிரம்பும் நிலையில் மட்டுமே நீரை கர்நாடகா விடுவித்து வருவதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரவேண்டிய நீர் வரத்து குறைந்து, குறுவை சாகுபடி பாதிப்புக்கு உள்ளாகிறது என்றும் சுட்டிக்காட்டி, விரைந்து காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்டுமாறு பாரதப் பிரதமர் அவர்களை 18-5-2012 நாளிட்ட கடிதத்தின்மூலம் நான் கேட்டுக்கொண்டேன். ஆனால், பாரதப் பிரதமர் இதற்கு செவிமடுக்கவில்லை. இதனையடுத்து தமிழ்நாட்டுடன் குறிப்பிட்ட விகிதாச்சாரப்படியான அதாவது Pro-rata sharing அளவில் நீரைப் பகிர்ந்துகொள்ள கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்றும், காவிரி கண்காணிப்புக் குழுவினால் இறுதி செய்யப்பட்டுள்ள இடர்ப்பாடு பங்கீட்டு முறைக்கு ஒப்புதல் வழங்கும் வகையில், காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்ட உத்தரவிட வேண்டியும், உச்ச நீதிமன்றத்தில் 21-7-2012 அன்று எனது தலைமையிலான அரசு ஒரு இடைக்கால மனுவினை தாக்கல் செய்தது. தமிழகத்தில் நிலவும் இடர்ப்பாட்டினைச் சுட்டிக்காட்டி, குறுவை சாகுபடியை தமிழக விவசாயிகள் இழந்துவிட்ட நிலையில், குறைந்தபட்சமாக ஒருபோக சம்பா சாகுபடியையாவது விவசாயிகள் மேற்கொள்ள ஏதுவாக தமிழகத்திற்கு உரிய நீரைத் திறந்து விடுமாறு கர்நாடக அரசுக்கு அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு பாரதப் பிரதமரை 23-8-2012 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2 பிற்பகல் 12-25

எனது தலைமையிலான அரசு எடுத்த உறுதியான தொடர் நடவடிக்கையினையடுத்து உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டின் காரணமாக, காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் 19-9-2012 அன்று புதுடெல்லியில் கூட்டப்பட்டது. 12-9-2012 முதல் காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் நடைபெறும் வரை நாள்தோறும் வினாடிக்கு 10,000 கன அடி தண்ணீரை கர்நாடகா, தமிழகத்திற்குத் திறந்து விட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் 10-9-2012 அன்று ஆணை பிறப்பித்தது.

19-9-2012 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தில் இடர்ப்பாடு காலத்தில் நீரைப் பகிர்ந்துகொள்ளுதல் கணக்கீட்டுப்படி தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நீரில், குறைபாடான 48 டி.எம்.சி. அடி நீரை, நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 24 நாட்களுக்கு உடனடியாகத் திறந்து விட வேண்டுமென்றும் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகா தொடர்ந்து நீரை விடுவிக்க ஆணை பிறப்பிக்குமாறும் நான் வலியுறுத்தினேன். கர்நாடகா இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இந்தக் கூட்டத்தில் இரு தரப்பினரிடையே ஒத்த கருத்து ஏற்படாத சூழ்நிலையில், 20-9-2012 முதல் 15-10-2012 வரை நாளொன்றுக்கு வினாடிக்கு 9,000 கன அடி வீதம் கர்நாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டுமென்றும் அதன்பிறகு காவிரி கண்காணிப்புக் குழு 15-10-2012 அன்று கூடி சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்தாலோசித்து 15-10-2012-க்குப் பிறகு நீர் விடுவிப்பது குறித்து முடிவெடுக்கலாமென்றும் காவிரி நதிநீர் ஆணையத்தின் தலைவரான மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்தார். ஆனால், கர்நாடகா அரசு இதனை ஏற்க மறுத்தது. தமிழகத்திற்கு சாதகமான முடிவினை மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவிக்காததைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்த குறைந்தபட்ச தண்ணீரைக்கூட விடுவிக்க முடியாது என்று கர்நாடக அறிவித்ததைக் கருத்தில்கொண்டும், எனது எதிர்ப்பினைத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தை மீண்டும் அணுகுவதைத் தவிர வேறு வழியில்லையென்று நான் அறிவித்தேன்.

இதனையடுத்து நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 48 டி.எம்.சி. அடி தண்ணீரை அடுத்த 24 நாட்களுக்கு கர்நாடகா

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டுமென்றும், காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, கர்நாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவிரி நதிநீர் ஆணையத்தின் தலைவர் பிறப்பித்த உத்தரவை கர்நாடக அரசு செயல்படுத்த வேண்டுமென்று 28-9-2012 அன்று தீர்ப்பளித்தது. இதன்படி 29-9-2012 முதல் நீரினை விடுவிக்கத் துவங்கிய கர்நாடகா, திடீரென்று தன்னிச்சையாக 8-10-2012 அன்று தண்ணீர் விடுவிப்பதை நிறுத்தி விட்டது. இத்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அவமதிக்கும் வகையிலும் நடந்துகொண்ட கர்நாடக அரசுக்கு எதிராக, நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை 10-10-2012 அன்று எனது தலைமையிலான அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

பிற்பகல் 12-30

இந்தச் சூழ்நிலையில், 11-10-2012 அன்று காவிரி கண்காணிப்புக் குழுவின் கூட்டம் புதுடெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் நீர் விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டு நீரான 48 டி.எம்.சி. அடி நீரை நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம், 24 நாட்களுக்குத் திறந்து விட வேண்டும் என்றும், கர்நாடக அரசு உச்ச நீதிமன்ற ஆணையை மதிக்காததால் உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு ஏற்பட்டது என்றும், இடர்ப்பாடு ஆண்டிலும் கர்நாடக அரசு நீரை அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து தனது பயன்பாட்டிற்காக விடுவித்துள்ளது என்றும் தெரிவித்து, தமிழ்நாட்டின் சம்பா பாசனத்திற்காக 15-10-2012 முதல் 16-02-2013 வரை சுமார் 145 டி.எம்.சி. அடி நீர் தேவைப்படும் என்று தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. எனினும், கர்நாடகத்தின் 4 அணைகளில் போதுமான நீர் இருப்பு இருந்தபோதிலும் தமிழகத்திற்கு மேலும் தண்ணீர் வழங்க இயலாது என கர்நாடகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் 16-10-2012 முதல் 31-10-2012 வரையிலான காலத்திற்கு 8.85 டி.எம்.சி. அடி நீரை கர்நாடகா தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று காவிரி கண்காணிப்புக் குழுவின் தலைவர் தனது முடிவினை அறிவித்தார். இந்த முடிவு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

தமிழகத்திற்கு எதிரானது என்றும், இடர்ப்பாடு காலத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கான 48 டி.எம்.சி. அடி குறைபாடு நீரை கணக்கில் கொள்ளாமல் 15 நாட்களுக்கு மட்டும் நீரை அளிக்க உத்தரவிட்டது சரியானதல்ல என்றும் தமிழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்தக் குறைந்தபட்ச நீரைக்கூட கர்நாடகா விடுவிக்க மறுத்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில், கர்நாடகத்தின் பிடிவாதப் போக்கை எதிர்த்து, தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 30-10-2012 அன்று விசாரணைக்கு வந்தபோது, இதுதொடர்பான அனைத்து அம்சங்களையும் பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய வேண்டுமென காவிரி கண்காணிப்புக் குழுவிற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து, 31-10-2012 அன்று புது டெல்லியில் நடைபெற்ற காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் 31-10-2012 வரை 8.85 டி.எம்.சி. அடி தண்ணீரை தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டுமென்று காவிரி கண்காணிப்புக் குழு 11-10-2012 அன்று உத்தரவிட்டதில், 2.15 டி.எம்.சி. அடி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறதென்றும், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, 2012 நவம்பர் மாதம் முதல் 2013 பிப்ரவரி வரை தண்ணீர் திறந்துவிட உத்தரவிட வேண்டுமென்றும் தமிழகத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட காவிரி கண்காணிப்புக் குழு, 16-10-2012 முதல் 31-10-2012 வரை தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரில் உள்ள பற்றாக்குறையான 2.15 டி.எம்.சி அடி தண்ணீரை 4-11-2012-க்குள் விடுவிக்குமாறும், 1-11-2012 முதல் 15-11-2012 வரையிலான காலத்திற்கு 3.94 டி.எம்.சி. அடி தண்ணீரை விடுவிக்குமாறும், ஆக மொத்தம் 6.09 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழகத்திற்கு திறந்துவிடுமாறும் உத்தரவிட்டுள்ளது. மேலும், உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தமிழ்நாடு, காவிரி கண்காணிப்புக் குழுவிற்கு அளிக்கவிருக்கும் கோரிக்கைகள் குறித்தும், தமிழகத்திற்கு மேற்கொண்டு தண்ணீர் விடுவிப்பது குறித்தும், 15-11-2012 அன்று நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று காவிரி கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே குறுவை சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், சம்பா சாகுபடியை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையில், காவிரியில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை எப்படியாவது பெற வேண்டுமென்பதன் அடிப்படையில், எனது அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நான் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியினாலும், உச்ச

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நீதிமன்றத்தின் தலையீட்டாலும், கர்நாடகா ஓரளவு தண்ணீரை விடுவிக்க கட்டாயப்படுத்தப்பட்டு தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்தின்மூலம் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும் என்ற எனது நம்பிக்கையையும் தெரிவித்து அமர்கிறேன்.

பிற்பகல் 12-35

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012—2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 61 முதல் 72 வரையிலான பன்னிரெண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த முதலமைச்சரும் செய்யாத வகையில் தமிழகத்திலுள்ள அனைத்து சீருடைப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் பொருள் வாங்க சிறப்பு அங்காடிகளை உருவாக்கியும், இடர் படி, உணவுப் படிகளை உயர்த்தியும், அவர்களுக்கு 'உங்கள் சொந்த இல்லம்' என்ற திட்டத்தினை உருவாக்கி, அதன்மூலம் 2,673